**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 149/2021 PW1**

24.07.2025 **வா.சா.1 சந்திரா சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 ஆகிய கிரையங்களை 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நிர்மலாவிற்கு 1ம் பிரதிவாதி நான் சொல்லித்தான் வா.சா.ஆ.14 மூலம் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 1ம் பிரதிவாதி கொடுத்த கிரைய ஆவணம் எனக்கு தெரிந்து தான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16ல் சாட்சி கையொப்பம் போட்டுள்ள முருகன் எனக்கு மகன் உறவுமுறை கொண்டவர் என்றும், அது குறித்து எனக்கு நன்றாகவே தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 10.01.2021 தேதியிட்ட கிரையப் பத்திரம் வா.சா.ஆ. 17ல் சாட்சி கையொப்பம் போட்டுள்ள சீனு எனக்கு உறவுமுறை என்றும், நான் தற்போது வா.சா.ஆ.17 குறித்து தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 23.08.2018 தேதியிட்ட வா.சா.ஆ.18 மற்றும் வா.சா.ஆ.19 கிரையம் பெற்ற ஜெயராமன் எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றும், எனக்கு அது குறித்து தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 23.08.2018 தேதியிட்ட வா.சா.ஆ.20 கிரையப் பத்திரம் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22, வா.சா.ஆ.23 கிரையத்தை மஞ்சளா என்பவர் வாங்கினார் என்றும், அவர் எனக்கு நாத்தனார் உறவுமுறை கொண்டவர் என்றும், அது குறித்து எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.24 ஜெயராமன், லட்சுமணனுக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 வெங்கடேசன் என்பவர் கிரையம் பெற்று அதில் அவர் கடை வைத்துள்ளது எனக்கு நன்றாக தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 27 வெங்கடேசனுக்கு 1ம் பிரதிவாதி கொடுத்த கிரையம் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 05.02.2015 தேதியிட்ட வா.சா.ஆ. 30 விஜயநாதனுக்கு கொடுத்த கிரையம் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கருமாரப்பட்டியில் வசிக்கிறேன் என்றால், 10 வருடத்திற்கு முன்பாக கருமாரப்பட்டியில் வசித்தேன். மேற்சொன்ன கிரையங்கள் செய்யப்படும் போது நானும், 1ம் பிரதிவாதியும் ஒரே

குடும்பமாகத்தான் இருந்தோம் என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  நான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் 2012க்கு முன்பாகவே தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், நான் தற்போது வழக்கு செய்வது காலவரையறையால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.  குடும்பச் சொத்தில் எனக்குண்டான பாகத்தை நான் ஏற்கனவே வாங்கிவிட்டேன் என்றும், அதனை பின்னிட்டு நான் விற்று விட்டேன் என்றும், தற்போது என் கையில் பணம் இல்லாததால் 1ம் பிரதிவாதி மீது வழக்கு போட்டு பணம் பெறுவதற்காக தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.  என்னிடம் ஆரம்பத்தில் சொத்து இருந்ததால் அப்போது எல்லாம் இந்த வழக்கை போடாமல் இருந்து விட்டு தற்போது என்னிடம் சொத்து இல்லை என்பதால் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.  இந்த வழக்கு சொத்தில் எனக்கு பங்கு கோர எவ்வித உரிமையும் இல்லை என்றும், ஆகவே இந்த வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.